# கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்

## மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டி-2019

| தரம் : 12,13 | | நேரம்: 02.30 மணி. |
| --- | --- | --- |

சுட்டெண் :.........................

- **எல்லா வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதுக.**
- **வினா இல 01 முதல் 10 வரையான வினாக்களுக்கான சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1. தெற்காசிய நாடுகளில் அதிக அழிவுகளை ஏற்படுத்தும் இயற்கை அனர்த்தம் எது?
   i) வெள்ளப்பெருக்கு ii) மண்சரிவு iii) சூறாவளி
   iv) வெப்பம் v) சுனாமி

2. அண்மையில் ஸ்பெயினிலிருந்து சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பிரிந்து செல்ல முற்பட்ட மாகாணம் எது?
   i). அந்தலூசியா ii) கெட்தலோனியா iii) அராகன்
   iv) பார்சிலோனா v) வலேன்சியா

3. Digital பிரிப்பு என்பதால் கருதப்படுவது யாது?
   i) அண்மையில் விருத்திசெய்யப்பட்ட கணித சூத்திரம்.
   ii) ஐக்கிய அமெரிக்க அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொழிநுட்பக் கருவி.
   iii) தொழிநுட்ப ரீதியில் வளர்ச்சியுற்ற மற்றும் வளர்ச்சியடையாத நாடுகளுக்கிடையிலான சமமின்மை.
   iv) புதிய செல்லிடப்பேசிகளின் ஒரு புதிய வகைப்படுத்தல்.
   v) தொழிநுட்பரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளின் செயற்பாட்டைக் குறிக்கும்

4. உலகின் பணக்காரர் பட்டியலில் முதலாவதாக இருக்கும் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர் யார்.?
   i) கார்லோஸ் சிலிம் (Carlos Slim) ii) பில்கேற்ஸ் (Bill Gates)
   iii) மார்க் ஷக்கபேர் (Mark Zuckerberg) iv) ஜெ.ஃப் பெஸஸ் (Jeff Bezos)
   v) வொறன் புபெற் (Warren Buffett)

5. ஓசோன் படையில் பாதிப்பை ஏற்படுத்தும் குளோரோ புளோரோ காபன் வாயுவை அதிகமாக வெளியிடும் நாடாக கருதப்படுவது.
   i) ரஷ்யா ii) ஐக்கிய அமெரிக்கா iii) இந்தியா
   iv) யப்பான் v) சீனா

6. 19வது சீர்திருத்தத்துக்கு அமைய அண்மையில் ஜனாதிபதி மேற்கொண்ட தீர்மானம் தவறு என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அந்தவகையில் தற்போதைய பாராளுமன்றத்தினை எத்தனை வருடங்களின் பின்னர் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது?
   i) ஐந்து வருடங்கள் ii) நான்கரை வருடங்கள் iii) மூன்றரை வருடங்கள்
   iv) ஆறு வருடங்கள் v) இரண்டரை வருடங்கள்

7. நிறுவனம் தனது நோக்கத்தை அடையும் பொருட்டு திட்டங்களை அமுல்படுத்துவதற்காக செயற்பாடுகளையும் வளங்களையும் ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்.?
   i) திட்டமிடல் ii) தீர்மானம் எடுத்தல் iii) ஒழுங்கமைத்தல்
   iv) அமுல்படுத்தல் v) கட்டுப்படுத்தல்

சுட்டெண் :..................................

8. புவித்தகட்டின் அதிர்வு காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகள் அடங்கிய விடைத்தொகுதியை தெரிவு செய்து கீறிடுக?

(A) பூமியதிர்வு ஏற்படல் (B) சுனாமி ஏற்படல்

(C) சமுத்திர ஆழிகள் உருவாகுதல் (D) மணல் திட்டுக்கள் உருவாகுதல்

(E) நிலச்சரிவு ஏற்படல்

i) ABCD ii) ABDE iii) ABCE iv) ACDE v) BCDE

9. உலகமயமாதலின் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள எதிர்கணிய விளைவினை மாத்திரம் காட்டும் விடையைத் தெரிவு செய்க?

(A) அந்நிய செலவாணி வருமானம், வட்டியும் செலுத்த வேண்டிய கடனும் பிறநாடுகளை நோக்கிப் பாய்ச்சப்படுதல்.

(B) உலகப் பொருளாதார மாற்றங்களுக்கு நேரடியாக முகம் கொடுத்தல்

(C) பாரிய கைத்தொழில்கள் நகரத்திற்கு வெளியே அமையப் பெறுவதால் பிரதேச அபிவிருத்தி ஏற்படல்.

(D) அபிவிருத்தி அடைந்த நாடுகளின் தலையீடுகள் அதிகரித்தல்.

(E) வெளிநாட்டுக் கடன், உதவி என்பவற்றில் தங்கியிருக்க வேண்டியேற்படல்.

i) ABCD ii) ABDE iii) ABCE iv) ACDE v) BCDE

10. நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி அல்லது பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக பிரசைகளின் கடமையாகக் கருதப்படக்கூடியது பின்வருவனவற்றுள் எதுவாகும்.

i) சூழல் நேயமான பொருட்கள் மற்றும் சேவை வழங்குனர்களை ஊக்குவித்தல்.

ii) சுற்றாடல் தொர்பான நியமங்களை அறிமுகம் செய்தல்

iii) மிகை நுகர்வைத் தடுத்தல்

iv) சுற்றாடல் மீதான தாக்கங்களை மதிப்பார்.

v) சூழலையும் வளங்களையும் நேசித்தல்.

(10X2 = 20 புள்ளிகள்)

◉வினா இல. 11 முதல் 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையை எழுதி பூரணப்படுத்துக.

11. 17.06.2019 அன்று இலங்கையின் இளம் விஞ்ஞானிகள் இருவரால் தயாரிக்கப்பட்ட முதலாவது செயற்கை கோளான ................................ விண்வெளிக்கு அனுப்பப்பட்டது.

12. கிழக்கு மாகாணத்தின் தற்போதைய ஆளுனராக தென்மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் ......................................... அவர்களை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

13. 13வது தெற்காசிய (சாரக்) விளையாட்டு விழா இவ்வாண்டு டிசம்பர் மாதம் ..................... நாட்டில் நடைபெறவுள்ளது.

14. D.N.A எனும் மரபணு ஆய்வு மூலம் குளோனிங் உயிரின உருவாக்கத்தில் முதன் முதலாக ........................ எனும் செம்மறி ஆடு வெளிக்கொண்டுவரப்பட்டது.

15. அறைவெப்பநிலையின் போது திரவநிலையில் காணப்படும் லோகம் ..................... ஆகும்.

(5X2 = 10 புள்ளிகள்)

சுட்டெண் :..................................

⦿ வினா இல. 16 முதல் 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமாக விடை தருக.

16. (i) 2018 ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டி நடைபெற்ற நாடு எது?
..........................................................................................................

(ii) 2022 ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைப்பந்தாட்டப்போட்டி நடைபெறவுள்ள நாடு எது?
..........................................................................................................

17. (i) உலக நாடுகளில் சிறந்த கல்விமுறையினைக் கொண்ட நாடாக கருதப்படும் நாடு எது?
..........................................................................................................

(ii) இலங்கையில் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
..........................................................................................................

18. (i) இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் யாப்புச் சீர்திருத்தம் எது?
..........................................................................................................

(ii) 19வது சீர்திருத்தத்தின்படி பாராளுமன்றத்தின் பதவிக் காலம் எத்தனை ஆண்டுகள்?
..........................................................................................................

19. (i) ஐக்கியநாடுகள் சபையில் இலங்கை உறுப்புரிமை பெற்றுக்கொண்ட ஆண்டு யாது?
..........................................................................................................

(ii) ஐக்கியநாடுகள் சபையில் தற்போது அங்கம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை யாது?
..........................................................................................................

20. (i) உலகின் மிகப்பெரிய பாலைவனமாக கருதப்படும் சகாராப் பாலைவனம் அமைந்துள்ள கண்டம் எது?
..........................................................................................................

(ii) பாலைவனத்தில் தோற்றப்பெறும் நிலவுருவங்களில் ஒன்றைக் குறிப்பிடுக?
..........................................................................................................

21.



(i) படத்தில் காட்டப்பட்டுள்ள நபர் யார்?

..............................................................

(ii) இவர் எந்த நாட்டின் தலைவர்?

...........................................................

22.



(i) படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம் எது?

....................................................................

(ii) இதனைத் தயாரித்தவர் யார்?

....................................................................

சுட்டெண் :.......................................

23.

(i) படத்தில் காட்டப்பட்டுள்ள இலச்சினை தொடர்புபட்ட அமைப்பு எது

……………………………………………………………………..

(ii) இந்த அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம் எது?

……………………………………………………………………



24.


(i) படத்தில் காட்டப்பட்டுள்ள நபர் யார்?

……………………………………………………………………..

(ii) இவர் தொடர்புடைய மதம் எது?

……………………………………………………………………

25.



(i) இது எந்த நாட்டினுடைய தேசியக் கொடி?

……………………………………………………………………..

(ii) இந்நாடு உலகத்தில் முதன்மை பெறும் ஒரு விடயத்தினை குறிப்பிடுக?

……………………………………………………………………

(10X2 = 20 புள்ளிகள்)

⦿ வினா இல. 26 முதல் 30 வரையான வினாக்களுக்கு “அ” “ஆ” எனும் இரு நிரல்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை பொருத்தப்பாட்டுக்கு அமையதொடர்புபடுத்துவதன் மூலம் பெறப்படும் சரியான விடையை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

26)

| “அ” | “ஆ” |
|---|---|
| 1. சீனா | A– றோஜா மலர் |
| 2. பாகிஸ்தான் | B– திராட்சை மலர் |
| 3. பிரித்தானியா | C– பிறை |
| 4. இலங்கை | D– கங்காரு |
| 5. அவுஸ்ரேலியா | E– வாளேந்திய சிங்கம் |

1.BCAED 2. ACBED 3. BEACD 4. DCBEA 5. BDCEA (……)

27)

| “அ” | “ஆ” |
|---|---|
| 1. முல்லேரியா | A– தியாகு த மெல்லோ த கஸ்ரோ |
| 2. தந்துரே | B– கொன்ஸ்டைன் டி சூசா |
| 3. பலன | C– டொன் ஜெரனிமோ த அசவிடோ |
| 4. ரந்தெனிவெல | D– பெரேரா லோபஸ்சூசா |
| 5. கண்ணொறுவ | E– அல்போன்ஸ் பெரேரா லசர்த்தி |

1. EBCDA 2. EDCBA 3. BACED 4. CEDBA 5. EDCAB (……)

சுட்டெண் :..................................

28) "அ" "ஆ"

1. கதம்பநதி — A– கும்புக்கன் ஓயா
2. கோணநதி — B– மாணிக்க கங்கை
3. ஜஜ்ஜிரநதி — C– தெதுறு ஓயா
4. கப்பரகந்த நதி — D– கலா ஓயா
5. குடிகந்த நதி — E– மல்வத்து ஓயா

1. BDECA 2. EDCAB 3. EDCBA 4. EBDAC 5. ABEDC (……)

29) "அ" "ஆ"

1. ஓமான் — A– யூரோ
2. யப்பான் — B– டொலர்
3. இந்தியா — C– றியால்
4. அவுஸ்ரேலியா — D– யென்
5. இத்தாலி — E– ரூபாய்

1.BADEC 2. CADBE 3. BDECA 4. CDEBA 5. CDABE (……)

30) "அ" "ஆ"

1. ATM — A– விவசாயம்
2. EEG — B– பாதுகாப்பு
3.. RFID — C– சுகாதாரம்
4. CCTV — D– கல்வி
5. MULTI MEDIA — E– வங்கி நடவடிக்கைகள்

1.BACDE 2. ABCED 3. EACBD 4. EBEDA 5. ECABD (……)

(05X2 = 10 புள்ளிகள்)

⦿ வினா இல. 31 முதல் 35 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக

31. i) பூகோள வெப்பமடைதலுக்கு காரணமாக அமைகின்ற பிரதான வாயு வகை எது?
……………………………………………………………………………………………

ii) பூகோள வெப்ப அதிகரிப்பில் செல்வாக்கு செலுத்துகின்ற மானிடக் காரணி ஒன்றையும் இயற்கை காரணி ஒன்றையும் குறிப்பிடுக?
1. ………………………………………………………………………………
2. ………………………………………………………………………………

iii) காலநிலை மாற்றமானது மனித நடவடிக்கைகளில் ஏற்படுத்துகின்ற பாதக விளைவொன்றை சுருக்கமாக விளக்குக?
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

32. i) இலங்கைக்கு GSP+ வரிச்சலுகை வழங்கும் நாடுகளின் கூட்டமைப்பினை எவ்வாறு அழைப்பர்?
……………………………………………………………………………………………

சுட்டெண் :.......................................

ii) GSP+ வரிச்சலுகைகள் மூலம் இலங்கையில் இருந்து அதிகம் ஏற்றுமதி செய்யப்படும் ஏற்றுமதிப் பொருட்கள் இரண்டு தருக?

1. ………………………………………………………………………………………

2. ………………………………………………………………………………………

iii) GSP+ வரிச்சலுகை இல்லாமல் ஆக்கப்பட்ட காலத்தில் இலங்கை எதிர்நோக்கிய சவால்கள் இரண்டைக் குறிப்பிடுக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

33. i) Facebook நிறுவனத்தின் ஸ்தாபகர் யார்?

………………………………………………………………………………………….

ii) இன்றைய உலகில் அதிக பயனாளர்களைக் கொண்ட சமூக வலைத்தளங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

1. ………………………………………………………………………………………

2. ………………………………………………………………………………………

iii) சமூக வலைத்தள பாவனையால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டைக் குறிப்பிடுக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

34. i) இலங்கையில் முதலாவதாக கொண்டுவரப்பட்ட யாப்பு சீர்திருத்தம் எது?

………………………………………………………………………………………….

ii) இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் கொண்டுவரப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்கள் எவை?

1. ………………………………………………………………………………………

2. ………………………………………………………………………………………

iii) 19வது சீர்திருத்தத்தில் குறிப்பிடப்படும் இரண்டு அம்சங்களை தருக?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

35. i) இலங்கை தற்காலத்தில் பொருளாதார ரீதியாக எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் எது?

………………………………………………………………………………………….

ii) இலங்கையின் பொருளாதாரத்தில் அதிக வருவாயினைப் பெற்றுக் கொடுக்கும் இரண்டு துறைகளைப் பெயரிடுக?

1. ………………………………………………………………………………………

2. ………………………………………………………………………………………

சுட்டெண் :..........................................

iii) இலங்கையின் பொருளாதாரத்தை சீர்செய்வதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

.........................................................................................................

.........................................................................................................

.........................................................................................................

(5X5 = 25 புள்ளிகள்)

⦿ வினா இல. 36 முதல் 45 வரை தரப்பட்டுள்ள இடங்களை இலங்கைப் புறவுருவப்படமொன்றில் குறித்துப் பெயரிடுக.

36. மகாவலி கங்கைக்கு நடுவில் அமைந்திருக்கும் நகரம் எது?

37. புத்தபெருமான் இலங்கைக்கு வந்து சென்றதாக கருதப்படும் மேல்மாகாணத்தில் காணப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடம் எது?

38. இலங்கையின் நீளத்தின் எல்லையைக் குறிக்கும் தென்மாகாணத்தில் அமைந்திருக்கும் ஒரு முனை எது?

39. ஐரோப்பிய இனத்தவரின் கவனம் இலங்கை மீது திரும்பியமைக்கு எதுவாய் அமைந்த பிரதான துறைமுகம் எது?

40. உலக உரிமையாக கருதப்படும் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள எச்சக் குன்று எது?

41. இலங்கையின் சகல மத யாத்திரிகர்களும் தரிசிக்கும் தென்பகுதியில் அமைந்திருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம் எது?

42. சோழர்கள் தமது ஆட்சிக் காலத்தில் இலங்கையின் தலைநகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய இடம் எது?

43. இலங்கையில் போர்த்துக்கேயர் முதன் முதல் வந்திறங்கிய இடம் எது?

44. இலங்கையின் இராணுவ வீரர்களை கௌரவிக்கும் வகையிலும், போர்த்துக்கேயருடன் வெற்றி கொண்டதை நினைவுகூர்ந்தும் நிறுவப்பட்டுள்ள **ரணவிம றோயல் கல்லூரி** அமைக்கப்பட்டுள்ள இடம் எது?

45. இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட முதலாவது சுதந்திர வர்த்தகவலயம் அமைந்துள்ள இடம் எது?

(10X1 = 10 புள்ளிகள்)

⦿ வினா இல. 46 முதல் 50 வரை தரப்பட்டுள்ள இடங்களை உலகப் புறவுருவப்படமொன்றில் குறித்துப் பெயரிடுக.

46. உலகத்தில் முதன் முதல் ஜனநாயகம் தோற்றம் பெற்றதாக கருதப்படும் நகரம் எது?

47. 2022 ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டி நடைபெறவுள்ள நாடு எது?

48. ஆசியாவையும் ஆபிரிக்காவையும் இணைக்கும் கால்வாய் எது?

49. வாஸ்கொடகாமா வந்திறங்கிய வரலாற்று முக்கியத்தவம் வாய்ந்த இந்தியத் துறைமுகம் எது?

50. ஸ்கன்டிநேபியன் மலை காணப்படும் நாடு எது?

(05X1 = 05 புள்ளிகள்)